THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, it is not my concern. The Tourism Minister may consider about it.

திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவர் அவர்களே, "ஆந்திரா மகளிர் சபா" என்று இருக்கிறது. ஆந்திரா மகில சபா என்று கருதுகிறேன். ஆந்திரா மகில சபா மருத்துவ மனை மூலமாக குடும்பநலத் திட்டப்பணிகள் வேகமாக நிறைவேற்றப்படுகின்றவா ? குடும்பநலத் திட்டத்திற்காக என்று தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கத்தின் மானியம் ஓரளவு வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல் முட நீக்கி இயல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிக் குறிப்பிட்ட பணிகளுக்காக உதவித் தொகை கேட்பதும் அதை ஒரு வரைமுறைப்படுத்தித் தருவதும் வழக்கம். அந்த முறையில் குடும்பநலத் திட்டத்திற்காக எவ்வளவு என்ற விவரம் இல்லை. ஆனால் அவர்கள் குடும்பநலத் திட்டப்பணிகளையும் செய்து வருகிறார்கள்.

U.N.D.P. Project Reports

* 329 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government have received from the Union Government, any U.N.D.P. Project reports for developing minor fishing harbours in the State; and

(b) if so, the details thereof?

ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டப்பணி அறிக்கைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள மீன்பிடி சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டப்பணி அறிக்கைகள் ஏதும், மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்கு வந்தனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

1973 ஏப்ரல் 2]

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்தில் மல்லிப் பட்டிணம், கோடிக்கரை ஆகிய இடங்களில் மீன்பிடி தோணித் துறை கட்டுவதற்காக ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தினர் தயாரித்த இரு அறிக்கைகள் மத்திய அரசிடமிருந்து தமிழ் நாடு அரசிற்கு வந்துள்ளன. மத்திய அரசு சில விவரங்களைக் கேட்டிருக்கின்றது. அவை சென்னை மீனள இயக்குநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, என்ன விவரங்களை மத்திய அரசு கேட்டிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU: (1) Year-wise phasing of the number of ports and the landings and the correlation with the modernisation programme for the Fourth and Fifth Five-Year Plan periods;

(2) verification of the cost of estimate given in the project reports with reference to the current schedule of rates of the State Government for similar works;

(3) arrangements proposed to be made for the work, estimated date of commencement and completion of the harbour in the event of the harbours being considered for action; and

(4) arrangements for the maintenance and operation of the harbour and provision to be made in the State budget for covering all major expenditure.

THIRU A. R. DAMODARAN: May I know whether there is any proposal to develop Porto Novo into a minor fishing harbour?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: எனக்குத் தெரிந்தவரையில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினா 330 ஒத்தி வைக்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதுமாதிரி அடிக்கடி வினாக்கள் எல்லாம் ஒத்திவைக்கப்படுகின்றன. கொடுக்கப்படுகிற வினாக்கள் கூட 10, 12 வினாக்களுக்கு மேல் இருப்பதில்லை. அமைச்சரவர்கள் காலையில் பேரவைக்கு வந்தார்கள். காலையில் அந்தக் கூட்டுறவுத் துறை அமைச்சர் விருந்தில் கூட கலந்து கொண்டார். ஆனால் இங்கு வரவில்லை. இதுபோல் அமைச்சர்கள் வரவில்லையென்றால், முன்கூட்டியே தெரிவித்தால், நலமாக இருக்கும். அவர்கள் வரவேண்டுமென்று போட்டுவிட்டு வராமலிருப்பதால் வினாக்கள் அடிக்கடி ஒத்தி வைக்கப்படும் நிகழ்ச்சி ஏற்படுவதை தலைவர்

அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : எவ்வளவு கேள்விகள் பதில் சொல்லப் படாமல் இருக்கின்றன என்று ஆராய்ந்து, அவை 750 கேள்விகள் என்று கணக்கெடுத்து, அவை எந்தெந்த அமைச்சர் சம்பந்தப்பட்டவை என்றெல்லாம் ஆராய்ந்து, அந்தந்த அமைச்சருக்கு நானே தனியாகக் கடிதம் எழுதி, அந்தக் கேள்விகளுக்கு உடனடியாக பதில் சேகரித்துத் தரவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டு, அந்த முறையில் அவர்களும் முயற்சி செய்து, அந்த இலாகாவினருக்குத் தெரிவித்து அவர்களும் விடை அளித்தார்கள். ஆரம்பத்தில் 20, 25 கேள்விகளாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இப்போது 10-ல் நின்றுகொண்டிருக்கிறது. இதில் அமைச்சர்களும் அந்தந்த இலாகாவினரும் நம்முடன் ஒத்துழைப்பது நல்லது என்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Seven demands of the Tamil Nadu Elementary School Teachers Federation

*2 S.N. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Elementary School Teachers Federation has submitted a Charter of seven demands to the Hon. the Chief Minister; and

(*b*) if so, the action taken by the Government on the demands?

தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனத்தின் ஏழு கோரிக்கைகள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனம், ஏழு கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அக்கோரிக்கைகள் குறித்து அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?